DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 28 /2022
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW6 (LW10)
Defence

Name : Dr.Anukarthika

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 7th May 2026.

1ம் எதிரிக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 2 முதல் 4வரை எதிரிகள் ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் காயமடைந்து அசா.1 அமுதா என்பவருக்கு புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை

அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஹர்ஷிதா என்பவர் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

06.10.2021 அன்று ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவர் ஹர்ஷிதா பணியில் இருந்தபோது ராவுத்தன்குப்பம் மாரியம்மன்கோயில் தெருவைச் தெருவைச்சோந்த கோபால்ராஜ் என்பவரின் மனைவி அமுதா என்பவர் சிகிச்சகைக்கு வந்தார். அமுதாவை மருத்துவர் விசாரிக்க அவர் அன்றைய தினம் காலை 09.15 மணிக்கு மாரியம்மன்கோயில் தெரு ராவுத்தன்குப்பம் விழுப்புரத்தில் வைத்து மூன்று நபர்கள் தாக்கியதாகவும் அதில் இரண்டு நபர்கள் மரத்தடியாலும் ஒருநபர் கண்ணாடிபாட்டிலால் தாக்கியதாகவும் கூறினார். அவரை மருத்துவர் பரிசோதிக்க அவருக்கு 3 X 1 செமீ அளவில் மேல்உதடு பகுதியில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவா ்புறநோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் மருத்துவர் ஹர்ஷிதா அவர்கள் காயச்சான்று வழங்கினார். அந்த காயச்சான்று **அசா.ஆ.4** ஆகும். அவர் வழங்கிய விபத்துபதிவேடு **அ.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொல்லப்பட்ட ஆயுதத்தால் காயம்பட்ட நபர் தாக்கப்பட்டிருந்தால் காயச்சான்றில் குறிப்பிடப்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

அன்றைய தினம் ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவர் வருண்ராஜண்ணா பணியில் இருந்தபோது ராவுத்தன்குப்பம் மாரியம்மன்கோயில் தெருவைச் தெருவைச்சோந்த ராமு என்பவரின் மகன் ஏழுமலை என்பவரை அவர் நண்பர் ராமன் என்பவர் சிகிச்சகைக்கு அழைத்து வந்தார். ஏழுமலையை மருத்துவர் விசாரிக்க அவர் அன்றைய தினம் காலை 09.20 மணிக்கு ராவுத்தன்குப்பம் விழுப்புரத்தில் வைத்து அவருடைய மாமா கண்ணாடி பாட்டிலால் அவரது முன்தலையிலும் வயிற்றிலும் தாக்கியதாக கூறினார். அவரை மருத்துவர் பரிசோதிக்க அவருக்கு 2 X 5 X 0.5செமீ அளவில் இடது முன்நெற்றியில் வெட்டுகாயம் காணப்பட்டது. 5 X 5செமீ

அளவில் இடதுஇடுப்பு பகுதியில் வட்ட வடிவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வயிற்று அவா ˆபுறநோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயங்கள் மருத்துவர் வருண்ராஜண்ணா அவர்கள் காயச்சான்று வழங்கினார். அந்த காயச்சான்று **அசா.ஆ.6** ஆகும். அவர் வழங்கிய விபத்துபதிவேடு **அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொல்லப்பட்ட ஆயுதத்தால் காயம்பட்ட நபர் தாக்கப்பட்டிருந்தால் காயச்சான்றில் குறிப்பிடப்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

அமுதாவின் காயச்சான்றிதழில் 04.10.2021 அன்று அவர்சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அந்த காயச்சான்றிதழில் அவரை யார் யார் தாக்கினார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

ஏழுமலையின் காயச்சான்றிதழில் யார் யார் தாக்கினார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை**

காயம்பட்ட அமுதாவின் மருத்துவர் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல்கள் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசா.ஆ.8ன்படி அமுதா 06.10.2021 அன்று காலை 09.56 மணிக்கு மருத்துவமனைக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று காலை 10.00மணியளவில் அவரை பரிசோதித்து உள்ளார். மேற்படி அமுதாவின் விபத்து பதிவேடு அசா.ஆ.5ல் மருத்துவர் ஹர்ஷிதா அமுதா 06.10.2021அன்று காலை 10.00மணிக்கு மருத்துவரிடம் சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை**

இல்லை

ஒம்/-XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.